3. மாண்மிகு திரு. செ. மாதவன் (மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்).
4. திரு. பெ. சீனிவாசன் (பேரவைத் துணைத் தலைவர்).
5. திரு. து.ப. அழகமுத்து (அரசு தலைமைக் கொறடா).
6. திரு. ஆர். பொன்னப்ப நாடார்.
7. திரு. கே.டி.கே. தங்கமணி.
8. திரு. எ.ஆர். பெருமாள்.
9. திருப்பூர் திரு. எ.எம். மொய்தீன்.
10. டாக்டர் எச்.வி. ஹாண்டே.
11. திரு. எ. ஆர். மாரிமுத்து.
12. திரு. இ.எஸ். தியாகராசன்.
13. திரு. நா. காசிராமன்.

பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

(ஆ) நடைமுறை விதிக் குழுவிற்கு நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு மற்றொரு அறிவிப்பு. தமிழ்நாடு சட்டப்பேரவையின் 229 (1)-வது விதியின் கீழ் 1972–73-ம் ஆண்டுக்கு பின்வரும் உறுப்பினர்களை நடைமுறை விதிக் குழுவில் (Rules Committe) உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன் :—

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி.
2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்.
3. மாண்புமிகு திரு. செ. மாதவன்.
4. திரு. பெ. சீனிவாசன்.
5. திரு. து.ப. அழகமுத்து.
6. திரு. எல். கணேசன்.
7. திரு. வி. ஆலடி அருணா.
8. திரு. கு. திருப்பதி.
9. திரு. க. உரோ. எட்மண்ட்.
10. திரு. ச. சங்குமுத்து தேவர்.
11. திரு. ஓ. என்.சுந்தரம்.
12. திரு. கே.டி.கே. தங்கமணி.
13. திரு. தி.சி.ஆ. சிவப்பிரகாசம்.
14. திரு. கே. கந்தசாமி.
15. திரு. கே.என். குமாரசாமி
16. திரு. எம். எ. அபுசாலி.

பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக் குழுவின் தலைவர் ஆவார்.

(4) அவையுரிமைப் பிரச்சினே.

'நாத்திகம்' நாளிதழ் மீது எழுப்பப்பட்ட பிரச்னே யில் உரிமைக்குழுவின் இடைக்கால அறிக்கை.

Thiru P. SEENIVASAN: Mr. Speaker, Sir, I move—" That under Rule 191 (*b*) of the Assembly Rules, the Interim Report of the Committee of Privileges on the case raised against the Tamil Daily ' Nathigam ' in respect of certain comments published in its issue, dated 10th March 1972 presented to the House on 28th March 1972 be taken into consideration."

The motion was put and carried and the report was taken into consideration.

Thiru P. SEENIVASAN : Mr. Speaker, Sir, I move—' That under Rule 191(*d*) of the Assembly Rules, this Assembly agrees with the recommendations contained in the Report. '

The motion was put and carried.

(5) அரசினர் தீர்மானம்.

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

" தமிழ்நாடு சட்டப் பேரவை நடைமுறை விதி 21 (3)ன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் 3-ம் வரிசை எண் உள்ள (3)-வது தலைப்பின் கீழ் உள்ள தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/72) மசோதாவை (2)-வது தலைப்பின்கீழ் உள்ள தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/72) என்பதற்கு முன்னதாக எடுத்துக் கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நீர் வழங்கு-வடிகால் வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நீர் வழங்கு-வடிகால் வாரிய (திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.